




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | YouTube VARALARUU | 7502051351








திங்கள் ❖ ஜூலை. 03, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 269 ❖ ரூ.10


### மகாராஷ்டிரா துணை முதல்வரானார் அஜித் பவார்-என்சிபி எம்எல்ஏ.,க்கள்

# கட்சித் தாவல்

## அஜித் பவார், தேவேந்திர பட்நவிஸ் என இரண்டு துணை முதல்வர்கள்

## மகாராஷ்டிர அரசியலில் திடீர் திருப்பம்



**மும்பை , ஜூன். 03-**

**மகாராஷ்டிராவில் தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார் உடனான மோதலால், அக்கட்சியிலிருந்து வெளியேறினார் அஜித் பவார். தொடர்ந்து அம்மாநிலத்தில் ஆளும் பாஜக கூட்டணி அரசில் அவர் இணைந்தார். இதையொட்டி, அஜித் பவார் தன்னுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். இதனால் தேசியவாத காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்துள்ளது. தேசியவாத காங்கிரஸில் இருந்து விலகிய அஜித் பவார், தன் ஆதரவு எம்.எல்.ஏக்களுடன் ஆளும் பாஜக கூட்டணியில் இணைந்தார்.**

மகாராஷ்டிரா மாநிலத்தின் துணை முதல்வராக அஜித் பவார் பதவியேற்றுக் கொண்டார். அவருடன் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அதிருப்தி எம்எல்ஏ.,க்கள் பலரும் ஆளும் சிவசேனா (ஷிண்டே பிரிவு) - பாஜக கூட்டணியில் இணைந்தனர். தேசியவாத காங்கிரஸ் கட்சியின் 53 எம்எல்ஏக்களில் 40-க்கும் மேற்பட்டோர் அஜித் பவார் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று அஜித் பவார் மற்றும் 8 தேசியவாத காங்கிரஸ் எம்எல்ஏ.,க்கள் அமைச்சரகளாகப் பதவியேற்றுக் கொண்டனர். இதன் மூலம் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மிகப் பெரிய பிளவு ஏற்பட்டுள்ளது.

கடந்தசிலநாட்களுக்கு முன்னர் அஜித் பவார் வெளிப்படையாகவே மகாராஷ்டிரா எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்ய விரும்புவதாகக் கூறினார்.

இதுதொடர்பாகஅவர் அளித்தப் பேட்டியில், "மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும். மாறாக, கட்சியில் எதாவது பொறுப்பில் என்னை நியமிக்க வேண்டுகிறேன். எதிர்க்கட்சித் தலைவராகநான் சரியாக செயல்படவில்லைஎன்று சொல்லப்படுகிறது. சொல்லப்போனால் இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் எனக்கு ஆர்வம் இல்லை.

எனினும் கட்சி எம்எல்ஏக்களின் வற்புறுத்தலால் அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டேன். எனவே, அதில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும். மாறாக, கட்சியில் எனக்கு பொறுப்பு வேண்டும். கட்சி அமைப்பில் எனக்கு எந்தப் பதவி ஒதுக்கப்பட்டாலும் சரி, அதற்கு நியாயம் சேர்ப்பேன். இந்த கோரிக்கை குறித்து என்சிபி தலைமைதான் முடிவு செய்ய வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் மகாராஷ்டிரா அரசியலில் இந்தப் பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. இனி அஜித் பவார், தேவேந்திர பட்நவிஸ் என மகாராஷ்டிராவுக்கு இரண்டு துணை முதல்வர்கள் இருப்பார்கள். அஜித் பவார் மகாராஷ்டிராவின் 8-வது துணை முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.



புதுக்கோட்டை திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் ஊரணி ரூபாய்73.60 லட்சம் மதிப்பீட்டில் பனரமைக்கும் பணியினை, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை எம்.எல்.ஏ முத்துராஜா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயலட்சுமி, நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அனிதா, நகர் மன்ற உறுப்பினர் கனகம்மன் பாபு, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## “இலவச பேருந்து உள்பட எதிர்க்கட்சிகளின் இலவச அறிவிப்புகளை நம்பாதீங்க..” - பிரதமர் மோடி

**டெல்லி , ஜூன். 03-**

**காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அறிவிக்கும் இலவசங்களை நம்ப வேண்டாம் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.**

மத்திய பிரதேச மாநிலம் ஷாதோல் மாவட்டத்தில், புதிய சுகாதாரத் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். பின்னர் பேசிய அவர், காங்கிரஸ் உள்ளிட்ட வாரிசு அரசியலை மையமாக கொண்ட கட்சிகள், மக்களை கவர்வதற்கு போலி வாக்குறுதிகளை அளிப்பதாக கூறினார். இலவச மின்சாரம், கட்டணமில்லா பேருந்து வசதி போன்ற வாக்குறுதிகள் ஏமாற்று வேலை என்று பிரதமர் மோடி விமர்சித்தார்.

தொழில்துறை மற்றும் வணிகத்தை பாழாக்கும் வகையில், எதிர்க்கட்சிகள் இலவசங்களை அறிவிப்பதாக பிரதமர் மோடி சாடினார். மேலும், பாட்னாவில் நடைபெற்ற எதிர்க்கட்சிகள் கூட்டம் குறித்து பேசிய பிரதமர், ஊழல் வழக்கில் பிணை பெற்றவர்கள், முறைகேடு குற்றச்சாட்டில் சிறைதண்டனை அனுபவித்தவர்களுடன் கை கோர்த்து இருப்பதாக விமர்சித்தார்.

மக்களவைத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில், பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் மதச்சார்பற்ற முற்போக்கு இயக்கங்களின் ஆலோசனைக் கூட்டம் முன்னதாக நடைபெற்றது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் மூத்ததலைவர் ராகுல்காந்தி, ஐக்கிய ஜனதா தளகட்சித் தலைவர் நிதிஷ் குமார், ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவர் தேஜஸ்வி யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தாபானர்ஜி, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட 20 கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

கூட்டத்திற்குப் பின்பு கட்சித் தலைவர்கள் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். தேச நலனை பாதுகாப்பதற்காக இந்த முன்னெடுப்பு அவசியம் என்று நிதிஷ் குமார் தெரிவித்தார். மத்தியில் ஆளும் பாஜக அரசு தேச நலனுக்கு எதிரானது என்றும் குற்றம் சாட்டினார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை நல்ல விளைவைத் தரும் என்று தெரிவித்த ராகுல் காந்தி, எதிர்வரும் ஆலோசனைக் கூட்டத்தில் ஆழமாக அதுவிவாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும், எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை என்பது தொடர்ச்சியான செயல்முறை என்றும் இங்கிருந்து தொடங்கி முன்னேறும் என்றும் தெரிவித்தார்.

# சிந்து வெளி முதல் இன்றைய அலங்காநல்லூர் வரை காளைகள் இருக்கின்றன

### வடஅமெரிக்கா தமிழர் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



**சென்னை , ஜூன். 03-**

வடஅமெரிக்க தமிழ் சங்க பேரவை மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொலி வழியாக பங்கேற்று அவர் பேசியதாவது:- தாய்த்தமிழ்நாட்டின் மீது பற்றும் திராவிடமாடல் நல்லாட்சியின் மீது நம்பிக்கையும் கொண்டு எனக்கு இந்த விழாவில் பங்கேற்று உரையாற்ற வாய்ப்பளித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். "உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள்" மாநாட்டினை நீங்கள் நடத்தியபோது அதிலும் காணொலி மூலமாக கலந்து கொண்டு நான் உரையாற்றினேன். பெட்னா அமைப்புடன் இணைந்து தமிழ்நாடு அரசின் எம்.எஸ்.எம்.இ. துறையின் கீழ் இயங்கக்கூடிய டான்சிம் நிறுவனம் அந்த மாநாட்டை நடத்தியது. உலகெங்கும் வாழும் முதலீடு செய்யும் சக்தி படைத்த தமிழர்கள் நம் தமிழ்நாட்டில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு மட்டுமல்லாது அவர்களுக்கு வழிகாட்டியாக செயல்பட வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது.

இந்த முன்னெடுப்பின் முதல் கட்டமாக "அமெரிக்கத் தமிழ் நிதியம்" என்ற அமெரிக்க வாழ் தமிழர்களால் தொடங்கப்பட்ட அமைப்பு மூலமாக 10 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டின் தொடக்க நிலை புத்தொழில் நிறுவனங்களுக்கான முதலீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பொது ஊழிக்கு முன் 6-ம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பதும், படிப்பறிவும், எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக நாம் விளங்கினோம் என்பதையும் கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது. அதேபோல்,சிவகளையில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் பொது ஊழிக்கு முன் 1155 என கண்டறியப்பட்டுள்ளது. 'தண்பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவியல்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களான கொந்தகை, அகரம், மணலூர், தூத்துக்குடி மாவட்டம் - சிவகளை, அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம்- மயிலாடும்பாறை, விருதுநகர் மாவட்டம்- வெம்பக் கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் - துலுக்கர்பட்டி, தர்மபுரி மாவட்டம்பெரும்பாலை ஆகிய ஏழு இடங்களில் விரிவான ஆய்வுகள் நடந்து வருகிறது. கீழடிக்கு அருகில் அகரம் அகழாய்வுத் தளத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்தபோது அங்கே நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும் பாறையில் கிடைத்த பொருளானது பொது ஊழிக்கு முன் 1615-ம் ஆண்டுக்கும், பொது ஊழிக்குமுன் 2172-ம் ஆண்டுக்கும் இடைப்பட்டது என காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி சிந்து வெளி முதல் இன்றைய அலங்காநல்லூர் வரை காளைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் தமிழரின் தொன்மையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளன. தமிழ்நாடு அரசு, தொல்லியல் ஆய்வுகளுக்கு ஊக்கமளிக்கும் அரசாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுகள் அனைத்தையும் உலக ஆய்வாளர்களின் அளவுகோலுடன் மெய்ப்பித்து அவர்களை ஏற்றுக்கொள்ள வைத்து வெளியிடும் அரசாக அமைந்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்வதில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் ஆராய்ச்சிகளை தமிழ்நாடு அரசு முன்னெடுக்கும். இந்தியாவிலேயே, அதிகப்படியான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். அதிலும், வைகையைச் சுற்றித்தான். தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கவும், அதை உலகளவில் கொண்டு செல்லவும் அரசு திட்டமிட்டுள்ளது. கீழடி அகழாய்வில் 1000-க்கும் மேற்பட்ட குறியீடுகளும், 60-க்கும் மேற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்பு கொண்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்களை உலகத் தமிழர்களும், பொதுமக்களும் கண்டுகளிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் 'கீழடி அருங்காட்சியகம்' தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து, திருநெல்வேலியில், பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூரில், கலைஞர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் காண்பதற்கு நீங்கள் அனைவரும் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும் என்று இரு கரம் கூப்பி அழைக்கிறேன். இவ்வாறு பேசினார்.

### அறந்தாங்கி அருகே மாரியம்மன் கோவில் தெருவில்

# பகுதிநேர நியாயவிலைக் கடையை திறந்து வைத்தார் அமைச்சர் மெய்யநாதன்



**அறந்தாங்கி, ஜூன். 03-**

மாரியம்மன் கோவில் தெரு பகுதிநேர நியாயவிலைக் கடையை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், மாரியம்மன் கோவில் தெரு பகுதிநேர நியாயவிலைக் கடையை திறந்து வைத்த அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி பொதுமக்களுக்கு தேவையான இடங்களில் புதிய நியாயவிலைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம்பொதுமக்கள் வீண் அலைச்சலை தவிர்ப்பதுடன், தரமான உணவுப் பொருட்களை தங்களது இல்லங்களுக்கு அருகிலேயே பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுகிறது.

அரசர்குளம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கட்டுபாட்டில் உள்ள அரசர்குளம் கீழ்பாதி முழுநேர தாய் அங்காடியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள மாரியம்மன் கோவில் தெரு பகுதிநேர அங்காடியானது 374 குடும்ப அட்டைகளுடன் பிரதி வாரம் செவ்வாய்கிழமை மட்டும் இயங்கும் வகையில் மாரியம்மன் கோவில் தெரு கிராம மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதிநேர நியாயவிலைக் கடை திறந்து வைப்பதன் மூலம் மழை, வெயில் போன்ற இயற்கை சீற்றம் உள்ள காலங்களிலும் பொதுமக்கள் தங்களது வீட்டின் அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தங்களுக்கான உணவுப் பொருட்களை தங்களது கிராமத்திலேயே பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், முதுநிலை ஆய்வாளர் (பொ.வி.தி) மனோகரன், மாவட்ட கவுன்சிலர் சரிதாமேகராஜ், வட்ட வழங்கல் அலுவலர் ரமேஷ், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தவறுதலாக ஊசிபோட்டதாக புகார் குழந்தை கை பாதிப்பு பற்றி விசாரிக்க மூவர் குழு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



சென்னை , ஜூலை3-

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 1½வயது குழந்தைக்கு கையில் டிரிப் ஏற்றியதில் தவறுதலாக ஊசி போட்டதால் அந்த குழந்தையின் கையை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:- அந்த குழந்தை குறைபிரசவத்தில் பிறந்ததால் உடலில் பல பிரச்சினைகள் இருந்துள்ளது. இதுபற்றி டீன் ஏற்கனவே பெற்றோரிடம் விளக்கமாக கூறி இருக்கிறார்.

தொடர்ந்து அந்த குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. டாக்டர்களோ, செவிலியர்களோ குழந்தைகளை காப்பாற்றத்தான் போராடுவார்கள். தவறுதலாக ஊசி போட வாய்ப்புகுறைவு.ஒருவேளை கவனக்குறைவாக இருந்தார்களா என்று விசாரிப்பதற்காக 3 மருத்துவர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு விசாரித்து அறிக்கை தரும். கவனக் குறைவு ஏற்பட்டு இருந்தால் அதற்கான பொறுப்பை அவர்கள் தான் ஏற்க வேண்டும். அந்த குழந்தைக்கு தேவையான சிகிச்சைகளை மருத்துவர்கள் செய்து வருகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# ரேஷன் கடைகளில் தக்காளி மலிவு விலைக்கு விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: விஜயகாந்த் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை. 3-

ரேஷன் கடைகளில் தக்காளி உள்ளிட்ட காய்கறிகளை மலிவு விலைக்கு விற்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விஜயகாந்த் வலியுறுத்தி உள்ளார்.

தேமுதிக தலைவர் விஜகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கடந்த சில தினங்களாக தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. சமையலுக்கு மிக அவசியமான தக்காளி விலை 100 ரூபாயை தாண்டி விற்பனையாகி வருகிறது.

தக்காளி விலையைப் போல அவரக்காய், பீன்ஸ், இஞ்சி, பச்சை மிளகாய் போன்றவற்றின் விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. பீட்ரூட், வெண்டைக்காய், கத்திரிக்காய், பாகற்காய், பீர்க்கங்காய், புடலங்காய், கொத்தவரங்காய், இஞ்சி, சின்ன வெங்காயம் என்று அனைத்து வகை காய்கறிகளும் விலை உயர்ந்து விட்டது.

ஏற்கனவே அனைத்து விலைவாசிகளின் உயர்வால் அன்றாட செலவு கூட பணம் இல்லாமல் ஏழை எளிய மக்கள் தவித்து வரும் நிலையில், தற்போது காய்கறிகளின் விலை உயர்வால் விழி பிதுங்கி நிற்கின்றனர். பசுமை பண்ணை கடைகளில் தக்காளி விலை குறைந்த விலைக்கு விற்பதை போன்று, அனைத்து ரேஷன் கடைகளிலும் தக்காளி உள்ளிட்ட காய்கறிகளை மலிவு விலைக்கு விற்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.




# 9 மாவட்டங்களில் அடுத்த 4 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு – வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை,ஜூலை,3

சென்னை, வளிமண்டலசுழற்சிமேற்கு திசை காற்று காரணமாக தமிழ்நாட்டில் இன்று முதல் 4 நாட்களுக்கு பரவலாக மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், இன்று (திங்கட்கிழமை) 5 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான 'ஆரஞ்சு அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வரும் நிலையில், அதன் தொடர்ச்சியாக தெற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சி, மேற்கு திசை காற்று வேக மாறுபாடு ஆகியவை காரணமாக 4 நாட்களுக்கு பரவலாக மழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும், நீலகிரி, கோவை, திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தமிழகத்தில் 9 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, திருவாரூர், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, நாகை ஆகிய 9 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடகாவில் இருந்து உரிய நீரை பெறவில்லை தமிழக அரசுக்கு ஓ.பன்னீர்செல்வம் கண்டனம்



சென்னை , ஜூலை3-

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், பாசனத்திற்கான தண்ணீரை கோடை மழை மூலமாகவும், கர்நாடகம் தண்ணீரை திறந்துவிடும் என்ற எதிர்பார்ப்பிலும், ஐந்து லட்சம் ஏக்கர் நிலத்தில் புழுதி அடித்து நேரடி விதைப்பு பணியை டெல்டா விவசாயிகள் மேற்கொண்டு விட்டனர்.

குறுவை நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நீரின்மை காரணமாக விதைகள் முளைக்காமலும்; நிலத்தடி நீர்மூலம் முளைப்பு கண்ட பயிர்கள் பாதிக்கும் நிலையில் உள்ளதாகவும்; கடைமடைப்பகுதிகளுக்கு இன்னும் தண்ணீர் சென்றடையவில்லை என்றும், இந்த நிலை நீடித்தால், லட்சக்கணக்கான ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ள நேரடி விதைப்பு பாதிக்கப்படும் என்றும், ஏக்கருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்துவிட்டு கவலையில் உறைந்து போயுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் காவேரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பின்படி ஜூன் மாதத்தில் 9.1டி.எம்.சி. அடி தண்ணீரையும், ஜூலை மாதத்தில் 31டி.எம்.சி. அடி தண்ணீரையும் கர்நாடகம் திறந்துவிட வேண்டும். ஆனால், தண்ணீரை திறந்துவிட முடியாது என்றும், காவேரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டாலும் தண்ணீரை திறந்து விடுவது கஷ்டம் என்றும் கர்நாடக மாநில துணை முதலமைச்சர் பேசி இருக்கிறார். தி.மு.க. அரசின் திட்டமின்மை காரணமாக, பணத்தை போட்டு நேரடி விதைப்பினை மேற் கொண்ட விவசாயிகள் மன முடைந்து இருக்கிறார்கள். தி.மு.க.வின் மெத்தனப் போக்கிற்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறி உள்ளனர்.

# மேகேதாட்டுவில் அணை கட்ட தமிழ்நாடு ஒருபோதும் அனுமதிக்காது முத்தரசன் பேட்டி



காட்பாடி , ஜூலை3-

மேகேதாட்டுவில் அணை கட்ட தமிழ்நாடு ஒரு போதும் அனுமதிக்காது. அதேபோல, காவிரி ஆற்றின் குறுக்கே அணைக்கட்ட முயற்சி நடைபெற்றால் அதற்கு கட்சி பாகுபடின்றி தமிழ்நாடே எதிர்த்து நிற்கும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்ட கோரிக்கை மாநாடு காட்பாடியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட செயலாளர் லதா தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் முத்தரசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார்.

இதில், செய்தியாளர்களிடம் முத்தரசன் கூறியதாவது, ''தமிழக ஆளுநர் ஆர். என். ரவி ஆளுநர் பணியைத் தவிர மற்ற எல்லா வேலைகளையும் செய்கிறார். தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு பிரச்னையையும், கலவரத்தையும் உருவாக்குவதற்கான அனைத்து முயற்சியில் ஆளுநர் ஈடுபட்டு வருகிறார். அவரை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். கர்நாடக அரசு காவிரி நதிநீர் ஆணையம் அறிவித்துள்ளபடி கர்நாடகம் தமிழகத்திற்குரிய உரிய நதிநீர் பங்கீட்டினை உடனடியாக வழங்க வேண்டும். ஆனால், மேகேதாட்டுவில் கர்நாடகம் அணையை கட்ட முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ள தமிழக எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, இந்த விவகாரத்தில் கர்நாடக துணை முதல்வர் சிவக்குமார் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்காத திமுக அரசுக்கும், கூட்டணி கட்சியினருக்கும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமி எதைப் பேச வேண்டுமோ அதைத் தான் பேசி வருகிறார். தமிழக அரசின் ஒப்புதல் அனுமதியின்றி மேகேதாட்டுவில் அணை கட்ட முடியாது. அதனால் கர்நாடக துணை முதல்வர் சிவக்குமார் தனது பொறுப்பை உணர்ந்து பேச வேண்டும். அவர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர். காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டு மேகேதாட்டுவில் அணையை கட்டியே தீருவேன் எனக் கூறி வருகிறார். அரசியலுக்காக இது போல பேசி காலத்தையும், நேரத்தையும் வீணாக்கக்கூடாது. மேகேதாட்டுவில் அணை கட்ட தமிழ்நாடு ஒரு போதும் அனுமதிக்காது. மேலும், காவிரி ஆற்றின் குறுக்கே அணைக்கட்ட முயற்சி நடைபெற்றால் அதற்கு கட்சி பாகுபடின்றி தமிழ்நாடே எதிர்க்கும்.

மத்திய அரசு கூட்டுறவு சங்க மசோதாவை கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இது மாநில அரசின் உரிமையை பறிக்கும் செயலாகும். அவ்வாறு செய்யக் கூடாது. இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு. இங்கு பொது சிவில் சட்டத்தை அராஜகமாக கொண்டுவர முயற்சிக்கின்றனர். மத்திய அரசு எல்லா கட்சிகளுடன் பேசி முடிவெடுக்க வேண்டும். மணிப்பூரில் தொடர்ந்து கலவரம் நடக்கிறது. மத்திய அரசு அங்கு அமைதி திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

வேலூர் மாவட்ட மாநாட்டில் மேல்அரசம்பட்டு பத்திரப்பள்ளி அணைகளை விரைந்து கட்ட வேண்டும். பாலாற்றில் நீராதாரத்தை பெருக்க தடுப்பணைகள் அமைக்க வேண்டும், வேலூர் போக்குவரத்து நெரிசலை குறைக்க உயர்மட்ட மேம்பாலங்கள் அமைக்கவும், ஒரு புதிய சிப்காட் தொழிற்பேட்டை, கழிவுநீர் பாலாற்றிலும், ஏரிகளிலும் கலப்பதை தடுக்க வேண்டும், வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



▶ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று காலை சென்னை கோடம்பாக்கம் மண்டலத்திற்கு உட்பட்ட, எம்ஜிஆர் நகர், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகளில் பணியாற்றும் 60,587 தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து சிறப்புறையாற்றினார்.

## சுருட்டப்பள்ளி பள்ளிகொண்டேஸ்வரர் திருக்கோவிலில்

# சனிபிரதோஷ விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து குண்டு சாமி தரிசனம் செய்தனர்





ஊத்துக்கோட்டை, ஜூலை3-

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே ஆந்திர மாநிலம்,திருப்பதி ஜில்லா, நாகலாபுரம் மண்டலம், சுருட்டப்பள்ளி கிராமத்தில் புகழ்பெற்ற பள்ளி கொண்டீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. சிவன் சயன கோலத்தில் உள்ள இந்தக் கோவிலில் நேற்று முன் தினம் மாலை சனிபிரதோஷ விழா சிறப்பாக நடைபெற்றது.

இதை முன்னிட்டு நந்தி பகவானுக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், மஞ்சள், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களால் அபிஷேகம் செய்தனர். பின்னர், நந்தி பகவானுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது. பின்னர், சுவாமி பிரகார புறப்பாடு நடைபெற்றது.

இதன் பின்னர், பக்தர்களுக்கு தீர்த்தம், பிரசாதம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. ஜூலை மாதத்தின் முதல் சனி பிரதோஷ விழாவில் தமிழக, ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோவில் அறங்காவல் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# சிவ சேனா – பாஜக கூட்டணியில் இணைந்தது ஏன்? அஜித் பவார் விளக்கம்



மும்பை , ஜூலை3-

மகாராஷ்டிராவில் ஆளும் சிவ சேனா - பாஜக கூட்டணியில் இணைந்தது குறித்து அஜித் பவார் பேட்டியளித்துள்ளார். பிரதமர் மோடி தலைமையில் நாடு முன்னேறுவதாகக் கூறிய அவர் அந்த வளர்ச்சியில் இணைந்து கொள்ள விரும்பியே இந்த முடிவை எடுத்துள்ளதாகக் கூறினார்.

முன்னதாக நேற்று (ஜூலை 2) ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் அஜித்பவார் துணை முதல்வராகவும், சக்கன் பூஜ்பால், திலீப் வால்ஸே பாட்டில், அதிதி டட்கரே, தனஞ்சய் முண்டே, ஹசன் முஷ்ரிஃப், ராம்ராஜே நிம்பல்கர், சஞ்சய் பான்ஸோடே, அனில் பாய்தாஸ் பட்டீல் ஆகியோர் அமைச்சர்களாகவும் பதவியேற்றுக் கொண்டனர்.

அஜித் பவார் பேட்டியில்,"எங்களால்சிவ சேனாவுடன்கூட்டணியில் இருக்க முடியும் என்றால் பாஜகவுடனும் கூட்டணியில் இருக்க இயலும்தானே. இது மாநிலத்தின் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவு. பிரதமர் நரேந்திர மோடி தேசத்தின் வளர்ச்சிக்காக உழைக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இருக்க இயலாது. அதனால் நான் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளேன். ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் நான் ராஜினாமா செய்துவிட்டேன்.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக எதிர்க்கட்சிகள் ஒன்று திரள்வது பற்றி நிறைய ஆலோசனைகள் நடக்கின்றன. ஆனால் அதனால் விளைவு ஏதும் ஏற்படவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்க்கட்சிகளுக்கு ஒவ்வொரு நிலைப்பாடு இருப்பதே அதற்குக் காரணம்.

இந்தச் சூழலில் இதுவரை நான் எந்த எதிர்க்கட்சியிலும் பிரதமர் மோடியைப் போல் தேச நலனுக்காகப் போராடும் தலைவரைப் பார்க்கவில்லை. 1984-க்குப் பின்னர் இதுபோன்று தனித்து நின்று செயல்படும் தலைவரை நான் பார்க்கவில்லை. பிரதமர் மோடி கடந்த 9 ஆண்டுகளாக அவ்வாறாக உழைத்து வருகிறார். வெளிநாட்டிலும் அவர் பிரபலமாக இருக்கிறார். இந்த வளர்ச்சியில் நாங்கள் இணைய விரும்புகிறோம். அதனால் இந்தக் கூட்டணியில் இணைந்து செயல்பட விரும்புகிறோம்"என்றார்.

சஞ்சய் ராவத் கண்டனம்: இந்நிலையில் அஜித்பவாரின் அரசியல் நகர்வு குறித்து சிவ சேனா (உத்தவ் பால் தாக்கரே) பிரிவு எம்.பி. சஞ்சய் ராவத் தனது ட்விட்டர் பக்கத்தில், "மராட்டிய அரசியலை 'சுத்தப்படுத்தும்' பணியை சிலர் கையில் எடுத்துள்ளனர், அவர்கள் வழிக்கு வரட்டும். நான் சரத் பவாருடன் இப்போதுதான் பேசினேன். அவர், தான் வலிமையாக இருப்பதாகக் கூறியுள்ளார். தங்களுக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்றும் உத்தவ் தாக்கரே மூலம் அனைத்தையும் மீண்டும் உருவாக்குவோம் இருக்கும் என்றும் கூறியுள்ளார். இந்த விளையாட்டை மக்கள் நீண்ட காலம் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்" என்று மராட்டிய மொழியில் பதிவிட்டுள்ளார்.

# புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் பணியேற்புவிழா, நலத்திட்டங்கள் வழங்கும்விழா



**புதுக்கோட்டை , ஜுலை.3–**
வெள்ளிவிழா கண்ட புதுக்கோட்டைசென்ட்ரல் ரோட்டரி சங்கத்தில் நிகழாண்டுக்கான புதிய நிர்வாகிகள் பணியேற்பு விழா மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும்விழா புதுக்கோட்டை மர்லின் மஹாலில் நடைபெற்றது.

சங்கத்தின் முன்னாள் தலைவர் அன்னை பார்த்திபன் ரோட்டரி பிரார்த்தனை வாசித்தார். சங்கத்தின் தலைவா கோபிநாத் தலைமை வகித்து வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக ரோட்டரி மாவட்டம் 3000த்தின் ஆளுநா ஆனந்தஜோதி ராஜ்குமார், கௌரவ விருந்தினராக தமிழ்செம்மல் கவிஞர் தங்கம் மூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

சங்கத்தின் 2022–23 ஆண்டு செயல்பாடுகளை செயலாளர் ஆச்சி மெஸ் கண்ணன் எடுத்துக்கூறினார். பொருளாளர் சிவாஜி வருடாந்திர கணக்குகளை சமர்ப்பித்தார். விழாவின் முக்கிய நிகழ்வாக இந்த ஆண்டின் தலைவராக பொறியாளர் கார்த்திகேயன், செயலாளராக சரவணன், பொருளாளராக பொறியாளர் பெர்லின் தாமஸ் ஆகியோர் பணியேற்றனர். இவர்களுக்கு ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஆனந்தஜோதி ராஜ்குமார் பதவிப்பிரமாணம் செய்து வைத்து பணியில் அமர்த்தினார்.

புதிய தலைவர் பொறியாளர் கார்த்திகேயன் ஏற்புரை வழங்கி, தனது ஆட்சிமன்றக்குழுவினரை அறிமுகம் செய்தார். ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் விபரம் அடங்கிய டைரக்டரியை மாவட்ட ஆளுநர் ஆனந்தஜோதி ராஜ்குமார் வெளியிட சங்கத்தின் சார்பாக முன்னாள் தலைவர் ஆடிட்டர் உலகப்பன் அவர்கள் பெற்று கொண்டார். கவிஞர். தங்கம் மூர்த்தி இரண்டு மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கினார். சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் விபத்து காப்பீடு மண்டல செயலாளர் (திட்டம்) சிவாஜி வழங்கினார். பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.மாத்தூர் வள்ளலார் மாணவர் இல்லத்திற்கு 100 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

துணை ஆளுநர் கதிரேசன், மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, மண்டல செயலாளர் (திட்டங்கள்) சிவாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவிற்கு ரோட்டரி மாவட்ட முன்னாள் ஆளுநர் சொக்கலிங்கம், ரோட்டரி மாவட்ட நிர்வாகிகள்,புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள்,முன்னாள் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மேலும், இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை முன்னாள் தலைவர்கள் உள்ளிட்ட புதுக்கோட்டைசென்ட்ரல் ரோட்டரிசங்கநிர்வாகிகள் செய்திருந்தனர். விழாவின் நிறைவாக செயலாளர் சரவணன் நன்றியுரை கூறினார்.



▶ சென்னை, இராமாபுரம், பெருமாள் கோவில் தெருவில் அருள்பாலித்து வரும் அருள்மிகு அமிர்தவல்லி தாயார் சமேத ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம பெருமாள் ஆலய 29 ஆம் ஆண்டு பிரம்மோற்சவ விழா ஆனி மாதம் 11ஆம் நாள் ஜுன் 26 தேதி திங்கள் கிழமை தொடங்கி, ஆனி மாதம் 22 ஆம் நாள் ஜுலை 7 தேதி வெள்ளிக்கிழமை வரை 10 நாட்களும் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.பிரம்மோற்சவ விழாவை முன்னிட்டு, தினந்தோறும் காலை, மாலை இருவேளைகளிலும் சுவாமி புறப்பாடு, நண்பகல் அன்னதானம், மாலையில் இன்னிசை நிகழ்ச்சி என ஊரே திருவிழா கோலம் பூண்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக ஐந்தாம் நாள் கருட சேவையும்,நேற்று 6ஆம் நாள் ஞாயிறு அன்று காலை 8.45 மணி அளவில் சூர்ணாபிஷேகம் நடைபெற்றது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகி தாமோதரன், ராஜு, பாலாஜி பக்த ஜனசபாவினர் மற்றும் இராமாபுரம் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



▶ காரைக்கால் மாங்கனி திருவிழாவை முன்னிட்டு காரைக்கால் காபா டெக்ஸ் மற்றும் ஸ்ரீ அண்ணாமலை ஈஸ்வர் ஆலயத்தில் திமுக வர்த்தக அணி மாநில அமைப்பாளர் கந்தாஸ் ராஜா சார்பில் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் நாஜிம்,, சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன்,கலந்துகொண்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஹஜ் கமிட்டி தலைவர் இஸ்மாயில், மாநில துணை அமைப்பாளர் காசிநாதன், பொதுக்குழு உறுப்பினர் ராஜ்மோகன், சிறுபான்மை அணி மாநில அமைப்பாளர் ஜாகீர், திமுக வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் , வீடியோ சரவணன், லவ்லி அன்வர், ஷமீம்கேப்ஸ் செல்லப்பா மற்றும் காரைக்கால் சேம்பர் ஆஃப் காமர்ஸ் நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள் .

# தவறான சிகிச்சை கை அழுகிய விவகாரம்– அறுவை சிகிச்சை செய்து குழந்தையின் கை அகற்றம்

சென்னை, ஜுலை,3
சென்னைராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 1½ வயது குழந்தைக்கு கையில் டிரிப்ஸ் ஏற்றியதில் தவறுதலாக ஊசி போட்டதால் அந்த குழந்தையின்கையை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னைராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் செவிலியர்களின் அலட்சியத்தால் ஒன்றரை வயது குழந்தையின் கை அழுகியதாககுற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, குழந்தைக்கு மயக்கமருந்து எனப்படும் அனஸ்திசியா கொடுக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 2 மணி நேரம் அறுவை சிகிச்சைக்கு பின் குழந்தையின் அழுகியகை அகற்றப்பட்டது.

இந்நிலையில்,அறுவை சிகிச்சை நிறைவு பெற்ற நிலையில்குழந்தைதொடர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாகவும், குழந்தை தற்போது நலமுடன் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# நீர்நிலை ஏரிகள் மற்றும் ஓடைகளை அளவீடு செய்ய பொதுமக்கள் கோரிக்கை உடனே களத்தில் இறங்கிய ஊராட்சி மன்ற தலைவர்



செய்யூர்:ஜுலை-3
செங்கல்பட்டு மாவட்டம்,இலத்தூர் ஊராட்சிஒன்றியம்,சீவாடி ஊராட்சியில் உள்ள சித்தேரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தருமாறு ஊராட்சி இளைஞர்களிடமிருந்து ஊராட்சி மன்ற தலைவருக்கு மனு கொடுக்கப்பட்டது.

மேலும் ஊராட்சியில் உள்ள நீர்நிலைகளான ஏரிகள் மற்றும் ஓடைகளை பாதுகாக்க தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர் டாக்டர் ச.அரங்கநாதன் உள்ளாட்சிபிரதிநிதிகளின் கோரிக்கை மனுக்கள் பெறுதல் நிகழ்ச்சியில் சிறு குறு நடுத்தர தொழில் துறை அமைச்சர் த.மோ. அன்பரசன்,செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல் நாத்திடம் சீவாடி ஊராட்சியில் உள்ள சித்தேரியை அளவீடு செய்து, அத்துக்கள் அமைத்துத் தருமாறு மனு கொடுக்கப்பட்டது.

அதன் வாயிலாக நேற்று முன்தினம் சீவாடி ஊராட்சியில் உள்ள சித்தேரியை ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அளவிட்டாளர் பிரகாஷ் தலைமையில் கிராம உதவியாளர்கள் ஞானசேகரன் மற்றும் பிரபாகரன் உதவியுடன் ஏரியின் ஒரு பகுதி முழுவதும் அளவீடு செய்து அத்துக்கள் போடப்பட்டுள்ளது.

மேலும் இதற்கு உறுதுணையாக இருந்த ஊராட்சி மன்ற தலைவருக்கு அப்பகுதி இளைஞர்களும், பொதுமக்களும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

# அரசு போக்குவரத்து கழகங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் : சங்கரன்கோவிலில் அமைச்சர் உறுதி



தென்காசி, ஜுலை.3–
தென்காசிமாவட்டம்–சங்கரன்கோவிலில் அரசு போக்குவரத்து கழகத்தில் காலிப் பணியிடங்களை நிரப்பவிரைவில்முதல்வர் அறிவிப்பு வெளியிடுவார் என போக்குவரத்துதுறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் தெரிவித்தார். சங்கரன்கோவில் அரசு போக்குவரத்து பணிமனையில் 25 லட்சம் ரூபாய் மதிப்பில் பணியாளர்கள்ஓய்வுவரை மற்றும் 15 லட்ச ரூபாய் மதிப்பில் தானியங்கி சுத்தப்படுத்தும்இயந்திரம் அமைக்கும் பணி துவக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமை வகித்தார், மாவட்ட பஞ்சாயத்து தலைவி தமிழ்ச்செல்விபோஸ், சங்கரன்கோவில் நகராட்சி தலைவி உமா மகேஸ்வரி முன்னிலை வகித்தனர். அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் மோகன் வரவேற்றார். விழாவில் தென்காசி எம்பி தனுஷ் குமார் ,எம்எல்ஏக்கள் ராஜா, சதன் திருமலை குமார் ,அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் சரவணன், வணிகத்துறை மேலாளர் சுப்பிரமணியன், மேற்கு மேலாளர் சண்முகையா, சங்கரன்கோவில் பணிமனை மேலாளர் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் யூஎஸ்டி சீனிவாசன் புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி நகர் மன்றத் தலைவி விஜயா சௌந்தர பாண்டியன் கூட்டுறவு சங்கத் தலைவர் விஜய பாண்டியன், ஒன்றிய செயலாளர் பெரிய துரை, வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, வெற்றி விஜயன், லாலா சங்கர பாண்டியன், சி எம் ஏ ஜெகதீஷ், நாகூர் கனி ,சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் அமைச்சர் சிவசங்கர் பேசியதாவது, அரசு போக்குவரத்துக் கழக முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் தன்னிறைவு பெற்று வருகிறது மகளிருக்கான இலவச சேவை மூலம் ஏற்படும் நஷ்டத்திற்கான தொகை கடந்த ஆண்டு ரூ–1800 கோடியும், இந்த ஆண்டு ரூ– 2800 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டு அதிமுக ஆட்சியில் புதிய பணியிடங்கள் நிரப்பப்படவில்லை தற்போது முதல்வர் அரசு விரைவு போக்குவரத்து கழகம் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகத்திற்கும் புதிய பணி இடங்களை நிரப்ப உத்தரவிட்டுள்ளார் இன்னும் சில மாதங்கள் அனைத்து பணி மனைகளிலும் காலி இடங்களைநிரப்பமுதல்வர் விரைவில் அறிவிப்பு வெளியிடுவார். மத்திய அரசின்நிதிமற்றும்ஜெர்மன் வங்கி நிதி மூலம் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் பேசினார்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் வேலைப்பாடுகள் நிறைந்த அகல் விளக்குகள் கண்டெடுப்பு




சாத்தூர் , ஜுலை.3–
வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண் பானை ஓடுகள், அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த அகல் விளக்குகள் போன்றவை கண்டெடுக்கப் பட்டுள்ளன.

வெம்பக்கோட்டை அருகே விஜயகரிசல்குளம் மேட்டுக்காடு வைப்பாற்றின் கரையில் அமைந்துள்ளது. இது இரும்பு காலம் முதல் வரலாற்று தொடக்க காலத்தைச் சார்ந்த வாழ்விடப்பகுதி தொல்லியல் மேடு ஆகும். இத்தொல்லியல் மேடு 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு முதலாம்கட்டஅகழாய்வுப் பணிகள் கடந்த 2021ல் தொடங்கப்பட்டன. அதில், சுமார் 3,500க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

2 ம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த 6 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2ம் கட்ட அகழாய்வில் இதுவரை சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்காலப் பொருள்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.இந்நிலையில், கருப்பு மற்றும் சிவப்பு நிறங்களில் ஆன சுடுமண் பானை ஓடுகள், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அகல் விளக்குகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தொடர்ந்து இப்பகுதியில் ஏராளமான பழங்காலப் பொருள்கள் கண்டுக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து, தொல்லியல்துறை அலுவலர்கள் கூறுகையில், முதலாம் கட்ட அகழாய்வைத்தொடர்ந்து 2ம் கட்ட அகழாய்விலும் ஏராளமான பழங்காலப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் ஆர்வத்துடன் வந்து பார்த்துச்செல்கின்றனர். தற்போது கிடைத்துள்ள சுடுமண் பானை ஓடுகள் மற்றும் அகல் விளக்குகள் மூலம் பண்டை காலத்தில் வாழ்ந்த முன்னோர்களின் நாகரீகத்தையும் பண்பாட்டு வாழ்க்கை முறையையும் அறிய முடிகிறது என்றனர்.

# கொடைக்கானலில் தக்காளி ரூ.150–க்கு விற்பனை: பொதுமக்கள் அதிர்ச்சி



**திண்டுக்கல் , ஜுலை.3–**
கொடைக்கானல் மலைப்பகுதியில் ஒரு கிலோ தக்காளி ரூ.150–க்கு விற்பனையானதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல்மாவட்டம் கொடைக்கானலில் ஞாயிற்றுக்கிழமை கூடும் வாரச்சந்தை நேற்று (ஜுலை 2) நடந்தது. இந்த சந்தையில் கொடைக்கானல் நகர் பகுதி மக்கள், மேல்மலை மற்றும் கீழ்மலை பகுதி கிராமமக்கள் அதிகளவில் வந்து காய்கறிகளை வாங்கிச் செல்வது வழக்கம். இந்த சந்தைக்கு உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. இதில் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மழை காரணமாக தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த சில நாட்களாகவே வரத்து குறைந்து விலை மெல்ல உயர தொடங்கியது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு தரைப்பகுதியில் ஒரு கிலோ தக்காளி ரூ.100 முதல் ரூ.120 வரை விற்றது. ஆனால், இன்று கொடைக்கானலில் ஒரு கிலோ தக்காளி ரூ.150–க்கு விற்பனையானதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தக்காளி இல்லாமல் சமையல் இல்லை என்கிற நிலையில் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் அதை வாங்க முடியாமல் பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், மழையால் தமிழகம் முழுவதும் தக்காளி விளைச்சல்பாதித்துள்ளது. இதனால் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. போக்குவரத்து செலவு, ஏற்று கூலி, இறக்கு கூலி காரணமாக தரைப்பகுதியை விட மலைப்பகுதியில் விலை கூடுதலாக உள்ளது, என்றனர்.

# கர்நாடகாவில் இலவச அரிசி திட்டத்திற்கு பதில் பணம் வழங்க முடிவு



பெங்களூரு, ஜுலை.3–
கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலின்போது காங்கிரஸ் கட்சி 5 உத்தரவாத இலவச திட்டங்களை அறிவித்தது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம், 10 கிலோ இலவச அரிசி, 200 யூனிட் மின்சாரம், பெண்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம், பட்டதாரிக்கு மாதம் ரூ.3000, டிப்ளமோ படித்தவர்களுக்கு ரூ.1500 வழங்கப்படும் என உத்தரவாதம் அளித்தது.

அதன்படி கடந்த ஜுன் 13–ம்தேதி அரசுப் பேருந்துகளில் பெண்கள் மற்றும் திருநங்கைகள் இலவசமாக பயணம் செய்யும் திட்டத்தை முதல்வர் சித்தராமையா தொடங்கிவைத்தார். இதையடுத்து வறுமைகோட்டுக்கு கீழே வாழும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 10 கிலோ இலவச அரிசி வழங்கும் 'அன்ன பாக்யா' திட்டத்தை ஜுலை 1–ம் தேதி தொடங்குவதாக கர்நாடக அரசு அறிவித்தது. ஆனால் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய உணவுகழகம், வெளிச்சந்தையில் அரிசி விற்பனை செய்வதில்லை என தெரிவித்தது.

இதனால் கர்நாடக அரசுக்கு போதுமான அரிசி கிடைக்காததால், அன்ன பாக்யா திட்டத்தை தொடங்க முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலையில் முதல்வர் சித்தராமையா, ''அரிசி கிடைக்காததால் ஜுலை 1–ம் தேதி முதல் அரிசிக்கு பதிலாக பணம் வழங்கப்படும்'' என அறிவித்தார்.

அதன்படி வறுமை கோட்டுக்கு கீழே வாழும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 10 கிலோ இலவச அரிசி வழங்கும் 'அன்ன பாக்யா' திட்டத்தை பெங்களூருவில் சித்தராமையா தொடங்கி வைத்தார். அரிசி தட்டுப்பாடு காரணமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவசமாக 5 கிலோ அரிசியும், மீதமுள்ள 5 கிலோ அரிசிக்கு பதிலாக பணமாக, அதாவது 1 கிலோவுக்கு ரூ.34 வீதம் ரூ.170 வங்கி கணக்கில் செலுத்த உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து கிரஹ ஜோதி திட்டத்தின்கீழ் மாதம் 200 யூனிட் மின்சாரம் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். வருகிற ஆகஸ்ட் மாத மின் கட்டணத்தில் இருந்து 200 யூனிட் மின்சாரத்துக்கான கட்டணம் குறைக்கப்படும் என தெரிவித்தார்.

கர்நாடக உணவு மற்றும் பொதுவிநியோகத்துறை அமைச்சர் கே.ஹெச். முனியப்பா பெங்களூருவில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கர்நாடக மக்களின் உணவு பழக்கத்துக்கு ஏற்றவாறு அரிசிக்கு பதிலாக கேழ்வரகு, சோளம் ஆகியவற்றை வழங்குவது குறித்து பரிசீலித்து வருகிறோம். மத்திய அரசிடம் இருந்து அரிசி கிடைக்கும் வரை பணம் வழங்கப்படும். அரிசி கிடைத்த பின்னர், குடும்ப அட்டைதாரர்களுக்கு 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு கே.ஹெச்.முனியப்பா தெரிவித்தார்.

இதனிடையே முன்னாள் பாஜக முதல்வர் எடியூரப்பா, "காங்கிரஸ் அரசு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற தவறிவிட்டது. 10 கிலோ இலவச அரிசி வழங்காமல் மக்களை ஏமாற்றியுள்ளது. 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்குவதாகக்கூறி, மின்சார கட்டணத்தை பன்மடங்கு உயர்த்தியுள்ளது. இந்த கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். காங்கிரஸ் அரசை கண்டித்து நாளை 4–ம் தேதி விதான சவுதா வளாகத்தின் முன்பு தர்ணா போராட்டம் நடத்தப்படும்" என்றார்.



▶ மதுரை பைபாஸ் ரோடு குரு தியேட்டர் பஸ் டாப் அருகில் உள்ள லெட்சுமி மஹாலில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் வெங்கடேசன் மக்கள் சந்திப்பு கோரிக்கை மனுக்கள் பெறும் முகாமில் பதினொன்று வார்டுகளில் பட்டா பிரச்சனை, குடிநீர் பிரச்சனை, சாலை வசதி மின்சார பிரச்சினை, வீட்டு வரி உள்ளிட்டவை, மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை, குடிசை மாற்று வாரியம் போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேஷனிடம் பொதுமக்களும், அ.தி.மு.க கவுன்சிலர் சோலை ராஜா, தி.மு.க கவுன்சிலர் நாகநாதன் மனுக்களை அளித்த போது எடுத்த படம், உடன் மேயர் இந்திராணி, துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் பிரவீன் குமார், உதவி ஆணையாளர் சுரேஷ்குமார், தலைவர் சுவிதா விமல், உதவி ஆணையாளர் வரலட்சுமி, தலைவர் சரவண புவனேஷ்வரி, வடக்கு வட்டம் தாசில்தார் திருமலை, சமூக பாதுகாப்பு திட்டம் ஆனந்தி, துணை இயக்குனர் பரத் ஆகியோர் கலந்து கொண்டு மனுவை பெற்றுக் கொண்டனர்.



▶ நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், செம்மாண்டபட்டி ஊராட்சியில் ராசிபுரத்திலிருந்து ராசாம்பாளையம் வரை புதிய வழித்தட அரசு பேருந்தினை வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்.

# மருத்துவர்கள் அலட்சியத்தால் ஒன்றரை வயது குழந்தையின் கை பறிபோனதா?

## பெற்றோர்கள் குற்றச்சாட்டின் பின்னணி என்ன..

சென்னை, ஜூலை.3-

சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில், மருத்துவர்கள் அலட்சியத்தால் ஒன்றரை வயது குழந்தையின் கையை அகற்றும் நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் குற்றச்சாட்டியுள்ளனர்.

ராமநாதபுரத்தை சேர்ந்த தஸ்தகீர் என்பவர், 32 வாரத்தில் பிறந்த தனது ஒன்றரை வயது குழந்தையை தலையில் ரத்த கசிவு காரணமாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

தொடர்ந்து பல கட்ட சிகிச்சைகள் வழங்கப்பட்ட நிலையில், குழந்தைக்கு கையில் ட்ரிப்ஸ் போடப்பட்டது. இதில், ஏற்பட்ட குறைபாட்டால் கை அழுகி, தற்போது குழந்தையின் கையை அகற்ற அறுவை சிகிச்சை



செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக குழந்தையின் பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்த விவகாரம் அரசின் கவனத்திற்கு சென்ற நிலையில், குழந்தைக்கு கையில் ஊசி போட்டது பற்றி விசாரிக்க மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். தற்போது அந்த குழந்தைக்கு, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது குறித்த மருத்துவமனை தரப்பு விளக்கத்தில், 'தீவிர ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வளர்திறன் குறைபாடும் கொண்டிருந்த அந்த குழந்தை, நீர் கசிவை உறிஞ்சுவதற்காக பொருத்தப்பட்ட விபிஷன்ட் எனும் கருவி ஆசனவாய் மூலம் வெளியே வந்துவிட்டதாக தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, புதிய விபி ஷன்ட் கருவி பொருத்தப்பட்டதாகவும், அந்த அறுவை சிகிச்சைக்கு பின்பு குழந்தைக்கு வலது கையில் ரத்த உறைவு ஏற்பட்டது என்றும் கூறியுள்ள மருத்துவமனை, சீரிய முயற்சிகள் எடுத்த போதும் வலது கை முழுவதும் பரவியதால் கையை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாக விளக்கமளித்துள்ளது.



தென்காசி மாவட்டம் சுரண்டையில் இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்டத் தலைவர், தென்காசி தொகுதி எம்எல்ஏ பழனி நாடார் எஸ்சி, எஸ்டி, மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் தாவீது, ஊடகத்துறை தலைவர் வெங்கடேசன், வட்டாரத் தலைவர், தொகுதி தலைவர்கள் கலந்து கொண்டு பட்டாசு வெடித்து அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.

# அன்னவாசலில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம்

அன்னவாசல், ஜூலை.3-

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் அன்னவாசல் கிளை சார்பாக கருத்தரங்கம் மற்றும் கவியரங்கம் கோகிலா ஆங்கிலப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு கே.ஆர். தர்மராஜன் முன்னிலை வகிக்க கவிஞர் ரோஜா தலைமையில் செயலாளர் நடனக் கலைஞர் சாக்கியா பிரபு தொகுத்து வழங்களோடு விழா நடைபெற்றது. கவிஞர் சோழச்சி தலைமையுடன் தொடங்கிய கவியரங்கத்தில் கவிஞர் கொட்டுமருவி கோவிந்தசாமி பெருமாள் பட்டி அடைக்கலம் பத்மினி ஆசிரியை சசிகுமார் சுவாதி ஆகியோர் காலத்தை வென்ற கண்ணதாசன், பெண்ணே புரட்சி செய், மது என்னும் மாய அரக்கன், என் நண்பேனா என்பேனா போன்ற தலைப்புகளில் கவிஞர்கள் கவிபாட விழா



சிறப்புற்றது.

நிகழ்வில் கருத்துரை வழங்கிப் பேசிய பத்மினி ஆசிரியை கூறுகையில்:- எல்லோரும் யாரையாவது விசாரிக்கும் பொழுது நடை உடையாக இருக்கிறார்களா என்று கேட்பார்கள். குறிப்பாக பெண்கள் நடையோடும் அதாவது நன்னடையோடும் உடையோடும் அதாவது நாகரீக உடைகளை தவிர்த்து பாரம்பரிய உடைகளை அணிந்து பண்பாட்டை காக்கும் பெண்களாக நாம் வலம்வர வேண்டும் என்று எடுத்துரைத்தார். முன்னிலை வகித்து பேசிய கே.ஆர். தர்மராஜன் அவர்கள், முத்தமிழும் வளர்ந்து சிறப்பு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் ஜீவானந்தம் இந்தக் கலை இலக்கிய பெரும் மன்றத்தை தொடங்கி வைத்தார்கள். இன்று நடந்த இந்த கூட்டத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பாக தங்கள் திறமைகளை எடுத்துக்காட்டியது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். திறமைகளை மறைத்து வைக்காமல் அதை வெளிக் கொண்டு வந்து இந்த சமூகத்திற்கு நீங்கள் தொண்டாற்ற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் ஆகும் என்றார். இறுதியாக மீரா மைதீன் நன்றி கூறினார்.

# வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கான மின்கட்டண உயர்வு அமலுக்கு வந்தது

சென்னை, ஜூலை.3-

வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு உயர்த்தப்பட்ட மின்கட்டண உயர்வு நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரியத்துக்கு கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. அதை சமாளிப்பதற்காக மின்கட்டணத்தை உயர்த்த மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின்வாரியம் விண்ணப்பித்தது.

ஆணையம் உத்தரவு: இதுதொடர்பாக, பொதுமக்களிடம் கருத்து கேட்டபின், கடந்த ஆண்டு செப்.10-ம் தேதி முதல் மின்கட்டணத்தை உயர்த்தி மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டது. இதையடுத்து, வீடுகளுக்கு குறைந்தபட்சம் ஒரு யூனிட்டுக்கு ரூ.4.50 முதல் அதிகபட்சமாக ரூ.11 வரை கட்டணம் உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பிறப்பித்த உத்தரவில், 2026-27-ம் ஆண்டு வரை, ஆண்டுதோறும் ஜூலை 1-ம் தேதி முதல் மின்கட்டணம் உயர்த்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டு உள்ளது. அதில், 2023 ஏப்ரல் மாத நிலவரப்படி உள்ள பணவீக்க விகித அளவு அல்லது 6 சதவீதம் என இவற்றில் எது குறைவாக உள்ளதோ



அந்த அளவு கட்டணத்தை உயர்த்தலாம் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் பணவீக்கம் 4.70 சதவீதம் இருந்தது. எனவே, இதன் அடிப்படையில் மின்கட்டணம் 4.70 சதவீதம் வரை உயர்த்தப்பட இருந்தது. ஆனால், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம்தான் மின்கட்டணம் உயர்த்தப்பட்டதால் கட்டண உயர்வின் அளவை 4.7 சதவீதத்தில் இருந்து 2.18 சதவீதமாக அரசு குறைத்தது.

மேலும், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வீட்டு இணைப்பு, வேளாண் இணைப்பு, குடிசை இணைப்பு, கைத்தறி, விசைத்தறிகள் போன்றவற்றுக்கு மின்கட்டணம் உயர்த்தப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் வணிகம் மற்றும் தொழில் அமைப்புகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 13 பைசா முதல் 21 பைசா வரை மின்கட்டணம் உயர்த்தப்பட்டு உள்ளது. இந்த மின்கட்டண உயர்வு நேற்று முதல் அமலுக்கு வந்தது.

# புதுக்கோட்டை நகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு 41 விழுக்காடு சம்பள உயர்வு: சிஐடியு போராட்டம் வெற்றி



புதுக்கோட்டை, ஜூலை.3-

புதுக்கோட்டை நகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 41 விழுக்காடு சம்பள உயர்வு வழங்க நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது. இது சிஐடியு சங்கம் நடத்திய போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

புதுக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்களுக்கு போதிய சம்பளம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து இருந்து வருகிறது. இவர்களின் ஊதிய உயர்வுக்காகவும், வேறு சில கோரிக்கைகளுக்காகவும் சிஐடியு சங்கம் தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்களை கடந்த காலங்களில் நடத்தி வந்துள்ளது. இந்நிலையில், ஊதிய உயர்வு கேட்டு கடந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இதனைத தொடர்ந்து நிர்வாகத்தின் சார்பில் நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், துணைத்தலைவர் லியாகத் அலி மற்றும் அதிகாரிகள் சிஐடியு மாவட்டச் செயலாளர் அ.ஸ்ரீதர், புதுக்கோட்டை மாவட்ட உள்ளாட்சித் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் கே.முகமதலிஜின்னா, சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் முத்தையா உள்ளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தையில் தூய்மைப் பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.460, ஓட்டுநர்களுக்கு ரூ.547 ஊதியம் வழங்குவது எனவும், இஎஸ்ஐ, பிஎப், காப்பீடுகளுக்கான தொகைகளை நிர்வாகமும், தொழிலாளியும் இணைந்து செலுத்துவது, ஊதியத்துடன் கூடிய விடுப்பு வாரத்தில் இரண்டு அரை நாட்கள் வழங்குவது என எழுத்துப் பூர்வமான உடன்பாடு ஏற்பட்டது. மேற்கண்ட ஊதிய உயர்வு என்பது ஏற்கனவே அவர்கள் வாங்கி வந்த ஊதியத்திலிருந்து 41 விழுக்காடு கூடுதலாகும்.

இது குறித்து உள்ளாட்சித் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டப் பொதுச் செயலாளர் கே.முகமதலிஜின்னா கூறுகையில், இது சிஐடியு சங்கம் நடத்திய தொடர்ச்சியான போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். மேலும், பண்டிகைகால முன்பணம் உள்ளிட்ட இதர கோரிக்கைகளையும் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமாக வென்றெடுப்போம் என்றார்.

## கல் குவாரிகளில் டிஜிட்டல் சர்வே

# கரூரில் குவாரி, கிரஷர், டிப்பர் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம்

கரூர், ஜூலை.3-

கல் குவாரிகளில் டிஜிட்டல் சர்வேயை கைவிடக்கோரி குவாரி, கிரஷர், டிப்பர் லாரி உரிமையாளர்கள் நேற்று (ஜூலை 2) முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர்.

கரூர் மாவட்டத்தில் உள்ள கல் குவாரிகளில் எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் டிஜிட்டல் சர்வே நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த டிஜிட்டல் சர்வே நடவடிக்கையை கைவிடக்கோரி கரூர் மாவட்ட குவாரி, கிரஷர், டிப்பர் லாரி உரிமையாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

இதனிடையே,




டிஜிட்டல் சர்வேயை கைவிட வலியுறுத்தி, கரூர் மாவட்டம் பவித்திரம் அருகேயுள்ள புதுக்கநல்லி தனியார் இடத்தில் நேற்று (ஜூலை 2ம் தேதி) நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகளை நிறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கி உள்ளனர். இதில் கல்குவாரி, கிரஷர், டிப்பர் லாரி உரிமையாளர்கள், ஊழியர்கள், லாரி ஓட்டுநர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக, நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதேபோல், குவாரிகள், கிரஷர்கள் இயக்கப்படவில்லை.

# அன்னவாசல் அருகே நீரில் மூழ்கி 2 சிறுமிகள் பலி எம்எல்ஏ எம்.சின்னதுரை நேரில் ஆறுதல்

புதுக்கோட்டை, ஜூலை.3-

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி இரண்டு சிறுமிகள் நேற்று பரிதாபமாக உயிரிழந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே இரும்பாளி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமம் கூத்தாணிப்பட்டி. இக்கிராமத்தில் பாண்டியன்-சிவரஞ்சனி தம்பதியினர். இவர்களுக்கு நிவேதாஸ்ரீ(7), தஷ்விகா(2) ஹரணி(8மாதம்) ஆகிய மூன்று குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், அதே ஊரில் கல்குவாரிக்காக வெட்டிய பள்ளத்தில் வழங்கம்போல குளிப்பதற்காக சிவரஞ்சனி தனது மூன்று பெண்குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சென்றுள்ளார். குளிக்கும்போது நிலைதடுமாறி சிவரஞ்சனி மற்றும் மூன்று குழந்தைகளும் ஆழமான பள்ளத்தில் நீரில் மூழ்கியதாகக் கூறப்படுகிறது.

இதனை அறிந்த அக்கம் பக்கத்தினர் நீரில் மூழ்கியவர்களை



காப்பாற்றும் நோக்கில் வெளியே தூக்கியுள்ளனர். இதில் நிவேதாஸ்ரீ(7), ஹரிணி(8மாதம்) ஆகிய இரண்டு சிறுமிகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டனர். ஆபத்தான நிலையில் தாய் சிவரஞ்சனி(32) தஷ்விகா(2) ஆகியோர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மருத்துவமனையில் கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சின்னதுரை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், விவசாயத் தொழிலாளர் சங்க மாநில செயலாளர் எஸ்.சங்கர், மாவட்டச் செயலாளர் டி.சலோமி, சிபிஎம் மாவட்டக்குழு உறுப்பினர் கி.ஜெயபாலன், ஒன்றியக்குழு உறுப்பினர் ரகுபதி உள்ளிட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களைப் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தனர்.

மேலும், மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு உரிய இழப்பீடு வழங்கவும், நடந்துள்ள சம்பவம் குறித்து காவல்துறையினர் உரிய விசாரணை நடத்தவும் அறிவுறுத்தினர், அன்னவாசல் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குழந்தைகளை நேசிக்காத பெற்றோர்கள்

குழந்தைகளை நேசிக்காத மனிதர்கள் இங்கு உண்டா? என்னும் கேள்வி இருக்கையில். குழந்தைகளை நேசிக்காத பெற்றோர்கள் எப்படி இருக்க முடியும்? என்னும் பெரும்கேள்வி உங்களிடம் எழும் எனில் நிச்சயமாக இருக்கின்றார்கள் என்பதே என் பதிலாக இருக்கும்.

இப்பொழுது பெற்றோராய் இருக்கும் அனைவரும் குழந்தைகளாய் இருந்தபொழுது, பெரும்பான்மையர் வீடுகளில் தாத்தா, பாட்டிக்கள் வாழ்ந்தனர். பெரும்பாலும் கூட்டுக்குடும்ப வாழ்வியல் முறை இருந்தது. சரி, தவறுகளை பெரியோர்கள் சொல்லிக்கொண்டே இருப்பர். என்னதான்,

பாட்டி கொஞ்சிக்கொண்டே இருந்தாலும் இயல்புக்கு மீறி குழந்தைகள் செய்யும் எந்த செயலையும் அவர் அனுமதிப்பதில்லை, அது உணவாக இருந்தாலும் சரி,

உடையாக இருந்தாலும் சரி. அதேபோல தாத்தா கண்டித்துக்கொண்டே இருந்தாலும், குழந்தைகளிடம் அன்புகாட்ட தவறியதில்லை. அதனால்தான் இன்றைக்கும் பெற்றோர்களிடம் அந்தப் பண்பாடும், நல்லொழுக்கமும் இன்னும் மிச்சமிருக்கிறது. காலமாற்றம் என்னும் பெயரில் தனிக்குடும்பங்கள் தலையெடுக்கத் தொடங்கிய பிறகு, தாத்தா பாட்டிக்களையும் தனித்து விட்டுவிடப் பழகிவிட்டோம். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் எனச் சொல்வோம். அறநெறிகளையும், அறிவார்ந்த செய்திகளையும் அள்ளித்தரும் நூலகங்களைப் போன்றவர்கள் தாத்தாக்களும், பாட்டிக்களும்.

அவர்கள் இல்லாத வீடு, நல்ல குடும்பமாகவே இருக்க வாய்ப்பில்லாதபொழுது, எப்படி ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்ந்துவிட முடியும்?

குழந்தைகளுக்குப் பிடித்ததை எல்லாம் வாங்கித் தருவதே அன்பின் அடையாளமாக பெரும்பாலான பெற்றோர்களது எண்ணவோட்டம் மாற்றம்பெற்று விட்டது. Kurkure, bingo என குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை வாங்கிக்கொடுப்பதில் தொடங்கி, Noodles, Fried Rice, பானிபூரி என நம் வாழ்வியலுக்கு ஒவ்வாததாக உணவுமுறை மாற்றம்பெறத் தொடங்கி இருக்கிறது. சற்றே வளர்ந்த கிராமப்புறங்களில் கூட சராசரியாக 10 fastfood கடைகள் வந்துவிட்டன. நம்மால் அதை ஒரு வாய் உண்ண முடியாது. ஆனாலும் குழந்தைகள் கேட்கின்றார்கள். அழுது அடம்பிடிக்கின்றனர் கேட்பதை வாங்கிக்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அவர்களது வாழ்நாளைக் குறைத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொண்டிருக்கின்றோமா? என்பதை அறிய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. வீட்டில் சமைத்து உண்ண சலிப்படையத் தொடங்கியதன் விளைவு, Swiggy, Zomoto வில் தொடர்ந்து, இன்றைக்கு வீட்டிற்கே வந்து சமைத்து தருகின்றோம் என்னும் விளம்பரத்தில் வந்து நிற்கின்றது.

உடை என்பது அதை உடுத்துபவர்களுக்கு அழகைக் கொடுப்பதாக இருக்க வேண்டும். அதனால்தான் ஒருவரது புறமதிப்பீடு என்பது ஆள்பாதி, ஆடைபாதி என்பதாகவே அன்றே சொல்லி வைத்தார்கள். ஆனால் இன்றைக்கு கால் முட்டி தெரிய, தொடை தெரிய கிழிசல்களோடு இருப்பதே நாகரிகம் எனக்கருதி பல ஆயிரம் விலைகொடுத்து வாங்கி அணியும் பழக்கம் இன்று தமிழ்நாட்டிலும் தலைதூக்கி விட்டது. இன்றைக்கு குழந்தைப்பருவத்திலேயே ஆடை அலங்காரமாக இருக்கட்டும். சிகை அலங்காரமாக இருக்கட்டும். குழந்தைகளின் எதிர்காலத்தை சீரழிக்கும் அத்தனையையும் ஆர்வத்தோடு செய்து கொண்டிருக்கின்றோம். டீன் ஏஜ் பருவத்தை தொட்ட குழந்தைகள் அத்தனை பேரிடமும் இன்றைக்கு அலைபேசிகள் இருக்கின்றன. அனைவருக்கும் சமூக வலைத்தள கணக்குகள் இருக்கின்றன. எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை, எவரும் கட்டுப்பாடிலும் இல்லை.

விதிமுறைகள் கூட இன்றைக்கு அடக்குமுறைகளாக குழந்தைப்பருவம் எண்ணத்தொடங்கி இருக்கின்றது.

பள்ளிகளில் விளையாட்டுப் பாடவேளைகளை என்றைக்கு இந்த சமுதாயம் புறக்கணிக்கத் தொடங்கியதோ! அன்றே விதிமுறைகளுக்கு கட்டுப்படும் பண்புகளையும் வீசி எறியத்தொடங்கி விட்டது. பெரியோர்களே பயந்து, பயந்து மதுகுடித்த காலங்கள் மலையேறி, இன்றைக்கு இளம்தலைமுறையும் சாலையோரங்களில், மாலை நேரங்களில் கூட்டாக மது அருந்தும் கலாச்சாரம் கண்முன்னே காணவேண்டியிருபதைக் கண்டே மனம் பெரிதாகக் கலங்குகின்றது. இளம்தலைமுறையில் பெரும்பான்மையர் அதிவேக இருசக்கர மோட்டார் வாகனங்களை வைத்திருக்கின்றனர். அல்லது அதனை வாங்க வேண்டுமென்பதை கனவாக வைத்திருக்கின்றனர். மோட்டார் சாகசப் பந்தயங்களில் பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனங்களை பாசம் என்னும் பெயரில் வாங்கிக்கொடுக்கும் பெற்றோர்கள், ஏற்கனவே நிறைய பிள்ளைகளை இழந்த பெற்றோர்களை நினைவில் கொள்ளுதல் நல்லது.

தங்கள் பிள்ளைகளோடு இருந்து பேச நேரம் இல்லையென பெற்றோர்கள் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பிள்ளைகளிடம் அதனை உணர்த்த தவறிவிட்டனர். யாருக்காக உழைக்கின்றோம் என்பதை உணரவும் தவறிவிட்டனர்.

தங்கள் பிள்ளைகளுக்கு பணம், பொருள், சொத்து சேகரித்தல் முக்கியமென பணம் சார்ந்து சிந்திக்கும் பெற்றோர் தங்களது பிள்ளைகளது நல்லொழுக்கம், எதிர்காலம், பாதுகாப்பு என்னும் குணம் சார்ந்து சிந்திக்கத் தவறுவது வருத்தத்திற்குரியதாக இருக்கின்றது. இந்தப் பதிவு சிலருக்கு பிற்போக்குத்தனமாகக்கூட தெரியலாம். அந்த முற்போக்குவாதிகளுக்கான நான் இந்தப்பதிவை எழுதவில்லை. கண்முன்னே நம் தலைமுறை கரைந்து கொண்டிருக்கின்றதே என்னும் கவலையோடு எழுதுகின்றேன்.. இளைய தலைமுறையினர் சமூகப் பொறுப்புணர்ச்சியோடு மீண்டு வர வேண்டும். பெற்றோர்கள் *மீட்டுவர வேண்டும்* என்னும் அக்கறையோடு எழுதுகின்றேன்..

**சிகரம் சதிஷ்**
**எழுத்தாளர்- ஆசிரியர்**

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மகாராஷ்டிரா அரசியலில் திடீர் திருப்பம் துணை முதல்வரானார் அஜித் பவர்

# அன்னவாசலில் நீரில் மூழ்கி சகோதரிகள் பலி தாய் உள்ளிட்டோருக்கு தீவிர சிகிச்சை





# கர்நாடகா: இலவச அரிசி திட்டத்திற்கு பதில் பணம்: பாஜக நாளை ஆர்ப்பாட்டம்

சென்னை / புதுக்கோட்டை | 03.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

03.07.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

செல்லப்பன் ராமநாதன் , சிங்கப்பூரின் 6வது குடியரசுத் தலைவர் (பி.1924) (இ.2016)



நா. சண்முகதாசன் , ஈழத்தமிழ்த் தொழிற்சங்கவாதி, இடதுசாரி மாவோயிச அரசியல்வாதி (பி.1920) (இ.1993)



எம். எல். வசந்தகுமாரி , கருநாடக இசைப் பாடகர் (பி.1928) (இ.1990)



கோ. இளவழகன் , தனித்தமிழ் இயக்கச் செயற்பாட்டாளர் (பி.1948)



ஹர்பஜன் சிங் , இந்தியத் துடுப்பாளர் (பி.1980)




## இன்றைய நினைவு நாள்

எஸ். வி. சுப்பையா பாகவதர் , தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர், பாடகர் (இ.1954)



ராஜ்குமார் , இந்தித் திரைப்பட நடிகர் (பி.1926) (இ.1996)

